மாற்றுத்திறனாளிகள் போராட்டம்

திண்டுக்கல் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் முன் காத்திருப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மாற்றுத்திறனாளிகள் சங்கத்தினர். (வலது) தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கம்பம் வட்டார முல்லை மாற்றுத்திறனாளிகள் சங்கத்தினர்.

திண்டுக்கல்/தேனி,ஜூலை27: மனுக்களுக்கு ஒப்புகைச் சீட்டு வழங்குதல் உள்ளிட்ட 7 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி, மாற்றுத்திறனாளிகள் சங்கத்தினர், மாவட்ட அலுவலகம் முன் திங்கள்கிழமை காத்திருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள், பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கத்தின் திண்டுக்கல் மாவட்டக் குழு சார்பில் நடைபெற்ற இந்தப் போராட்டத்துக்கு மாவட்டச்செயலர் எஸ்.பகத்சிங் தலைமை வகித்தார். மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அலுவலகம் முன் அமர்ந்து தர்னாவில் ஈடுபட்டபோது, மாற்றுத்திறனாளிகள் அளிக்கும் மனுக்களுக்கு ஒப்புகைச் சீட்டு வழங்க வேண்டும். மாற்றுத்திறனாளிகள் அலுவலகத்தில் உள்ள கழிப்பறைகளை சுத்தமாக பராமரிக்க வேண்டும். குடிநீர் வசதி ஏற்படுத்த வேண்டும். மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டையை ஒப்படைக்கும்போதும், புதிய அட்டைக்கு விண்ணப்பிக்கும்போதும் காலதாமதமின்றி உடனடியாக வழங்க வேண்டும். அரசின் விதிமுறைகளுக்கு மாறாக ஊனத்தின் தன்மையை குறைத்தோ, கூட்டியோ மருத்துவச் சான்றிதழ் வழங்குவதைக் கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து முழக்கமிட்டனர். இதையடுத்து, போராட்டத்தில் ஈடுபட்ட மாற்றுத்திறனாளிகள் சங்க நிர்வாகிகளுடன் காவல் துறையினரும், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நலத் துறை அலுவலரும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

தேனி: மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித்தொகையை உயர்த்தி வழங்கக் கோரி, கம்பம் வட்டார முல்லை மாற்றுத் திறனாளிகள் நலச் சங்கத்தினர் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு மாநில மாற்றுத்திறனாளிகள் நல வாரிய முன்னாள் உறுப்பினர் கருப்பையா தலைமை வகித்தார். முல்லை மாற்றுத்திறனாளிகள் நலச் சங்கத் தலைவர் காமேஸ்வரன், வைகை மாற்றுத்திறனாளிகள் நலச் சங்கச் செயலர் சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கடந்த சட்டப்பேரவைத் தேர்தலின் போது தவெக தனது தேர்தல் அறிக்கையில் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை உயர்த்தப்படும் என அறிவித்தது. இதன்படி, உடனடியாக உதவித் தொகையை உயர்த்த வேண்டும் என பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி முழுக்கமிட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் முல்லை மாற்றுத்திறனாளிகள் நலச் சங்கச் செயலர் குமரேஷன், சுவராஜ், மகளிர் அணி நிர்வாகிகள் ஜமுனா, ஜெயந்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

மலையாண்டி சுவாமி கோயிலில் ஆடி படையல் திருவிழா

பூதகுடி மலையாண்டி சுவாமி கோயிலில் திங்கள்கிழமை நடைபெற்ற ஆடி படையல் திருவிழாவில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட வேல்கள்.

நத்தம், ஜூலை 27: திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகேயுள்ள பூதகுடி மலையில் அமைந்துள்ள மலையாண்டி சுவாமி கோயிலில் ஆடி படையல் திருவிழா திங்கள்கிழமை நடைபெற்றது.

விழா வையொட்டி, மலை உச்சியில் அமைந்துள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேல்களுக்கு வண்ண மலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.

தொடர்ந்து, சுவாமிக்கு சிறப்பு அபிஷேகங்கள், தீபாராதனைகள் நடைபெற்றன.

இந்த விழாவில் பூதகுடி, சுற்றுவட்டாரக் கிராமங்களைச் சேர்ந்த திரளான பக்தர்கள் பங்கேற்று சுவாமியை தரிசனம் செய்தனர்.

விழாவுக்கான ஏற்பாடுகளை பூதகுடி கிராமப் பொதுமக்கள் செய்தனர்.

கொடைக்கானலில் மிதமான மழை

கொடைக்கானலில் திங்கள்கிழமை பெய்த மழையால் மலைச் சாலையில் பகல் நேரத்தில் முகப்பு விளக்குகளை எரிய விட்டுச் சென்ற வாகனங்கள்.

கொடைக்கானல், ஜூலை 27 : கொடைக்கானலில் திங்கள்கிழமை மிதமான மழை பெய்தது.

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் பொதுவாக ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய மூன்று மாதங்களில் பருவ மழை பெய்வது வழக்கம். இந்த நிலையில், கடந்த மூன்று மாதங்களாக மழை பெய்யாததால் தண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதனிடையே கடந்த சில தினங்களாக கொடைக்கானலில் அவ்வப்போது சாரல் மழை பெய்தது. இந்த நிலையில் திங்கள்கிழமை காலை முதல் பிற்பகல் வரை குளுமையான காற்று வீசியது. தொடர்ந்து மிதமான மழை பெய்தது. கொடைக்கானல், பிரகாசபுரம், செண்பகனூர், பாக்கியபுரம், வட்டக்கானல் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சுமார் ஒரு மணி நேரம் மழை பெய்தது.

இதனால், மலைச் சாலைகளில் சென்ற வாகனங்கள் பகல் நேரங்களில் முகப்பு விளக்குகளை எரியவிட்டபடி மெதுவாகச் சென்றன.

காரில் கடத்தி வந்த 283 கிலோ புகையிலைப் பொருள்கள் பறிமுதல்

திண்டுக்கல், ஜூலை 27: கூம்பூர் அருகே காரில் கடத்தி வரப்பட்ட 283 கிலோ புகையிலைப் பொருள்களை போலீஸார் ஞாயிற்றுக்கிழமை இரவு பறிமுதல் செய்தனர்.

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூரை அடுத்த காசிபாளையம் பகுதியில் போலீஸார் ஞாயிற்றுக்கிழமை இரவு சிறப்பு வாகனச் சோதனை நடத்தினர்.

அப்போது, கரூரிலிருந்து திண்டுக்கல் வந்த பதிவு இல்லாத காரைப் போலீஸார் வழிமறித்தனர்.

இதையடுத்து, காரை நிறுத்திவிட்டு ஓட்டுநர் அங்கிருந்து தப்பி ஓடினார். காரில் சோதனையிட்டபோது, தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருள்கள் 283 கிலோ கடத்தி வந்தது தெரிய வந்தது.

இதையடுத்து, காருடன் புகையிலைப் பொருள்களை பறிமுதல் செய்த போலீஸார், தப்பியோடிய நபர் குறித்து விசாரித்தனர்.

பெரியகுளத்தில் பூட்டிய வீட்டில் நகை, பணம் திருட்டு

பெரியகுளம், ஜூலை 27: தேனி மாவட்டம், பெரியகுளத்தில் பூட்டிய வீட்டில் 6.5 பவுன் தங்க நகைகள், ரூ. 36 ஆயிரத்தை திருடிச் சென்ற மர்ம நபர்களை போலீஸார் தேடி வருகின்றனர்.

பெரியகுளம் வடகரை பட்டாளம்மன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் திருநாவுக்கரசு (50). பர்னிச்சர் கடையில் வேலை செய்து வரும் இவர், ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் வீட்டை பூட்டி விட்டு, சாவியை கோலப்பொடி பெட்டியில் வைத்து விட்டு மனைவியுடன் வெளியில் சென்றார்.

பின்னர், காலை 9.30 மணியளவில் வீட்டுக்கு வந்து பார்த்த போது, வீட்டின் பீரோவிலிருந்த 6.5 பவுன் தங்க நகைகள், ரூ. 36 ஆயிரத்தை மர்ம நபர்கள் திருடிச் சென்றது தெரியவந்தது.

இதுகுறித்து பெரியகுளம் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

விளையாட்டுத் துறைக்கான பத்ம விருது பெற விண்ணப்பிக்கலாம்

திண்டுக்கல், ஜூலை 27: விளையாட்டுத் துறையில் சாதனை படைத்தவர்களுக்கு வழங்கப்படும் பத்ம விருதுக்குத் தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக மாவட்ட விளையாட்டு அலுவலர் இரா. சிவா தெரிவித்ததாவது: கலை, இலக்கியம், கல்வி, விளையாட்டு, மருத்துவம், அறிவியல் , பொறியியல் ஆகிய தளங்களில் சாதனை புரிந்தவர்களுக்கு ஆண்டுதோறும் பத்ம விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதில் 2027–ஆம் ஆண்டுக்கான விளையாட்டுத் துறைக்கான பத்ம விருதுகளுக்கு மட்டும் தகுதியான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விருதுக்கான விண்ணப்பப் படிவம், இதர முக்கிய விவரங்கள், https://awards.gov.in, https://padmaawards.gov.in என்ற இணையதள முகவரியில் வெளியிடப்பட்டிருக்கிறது.

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்களை இணைய வழியில் ஜூலை 31–ஆம் தேதிக்குள் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

கூடுதல் விவரங்களுக்கு, மாவட்ட விளையாட்டு, இளைஞர் நலன் அலுவலர், மாவட்ட விளையாட்டரங்கம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (அருகில்) தாடிக்கொம்பு சாலை, திண்டுக்கல் – 624 004 என்ற முகவரியிலும், 74017 03504 என்ற கைப்பேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

NAME CHANGE

I, SAKTHIKUMAR BOOMINATAHAN 27/01/1974 born on (Native district Ramanathapuram) Residing at No: 317, Pandiyarajapuram Mettu Theru, Bethaniyapuram, Madurai-625016, Tamilnadu shall henceforth be known as SAKTHIKUMAR BOOMINATHAN

SAKTHIKUMAR BOOMINATAHAN

CHANGE OF NAME

My daughter, T. DARSHANA D/o THIAGARAJAN, born on 09th June 2009, residing at No: 7A, P.M.illam, M.G.R. Street, Soodamanipuram, Karaikudi Town, Sivagangai - 630 003, shall henceforth be known as DARSHANA. T. THIAGARAJAN

Karaikudi 25th July 2026

பிரமல் ஃபைனான்ஸ் லிமிட்டெட்

Piramal Finance

CIN : L65910MH1984PLC032839

பதிவு அலுவலகம் : அறை எண். 601, 6 வது தளம், பிரமல் அபிஜித் பில்டிங், பிரமல் அகாடெமியா கார்ப்பரேட் பார்க், காமராஜ் ஷுவேன், தியானேஷ்வர் நிவாஸ் எதிரில், LBS மார்க், ஹரா (மேற்கு), மும்பை - 400 070 தொலைபேசி - +91 22 3802 4000

கிளை அலுவலகம் : 171A & 171B LBR காம்பளக்ஸ், ராஜா நாயுடு சாலை, சிவானந்தா காலனி, கோயம்புத்தூர் - 641 012

தொடர்பு நபர்கள் : 1. பிரமல் ஃபைனான்ஸ் லிமிட்டெட் - 022 69482444

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு - பின்னிட்ட விற்பனை

பிணைக்காப்பு நிதிச்சொத்து பரிமாற்றப் பரிவர்த்தனைகளுக்கு பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 ன் கீழ், பிரமல் ஃபைனான்ஸ் லிமிட்டெட் (முன்பு "பிரமல் கேபிட்டல் & ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிட்டெட்") - ன் அதிகாரப்பூர்வ அலுவலராக இதன் கீழ்குறிப்பிட்டுள்ள நாமின் சொத்துக்களை சுவாதீனம் எடுக்கப்பட்டதை தொடர்து, கடன்தாரர்/களிடமிருந்து நிலுவைத்தொகைகளை வசூலிக்கும் பொருட்டு, இதன் கீழ்குறிப்பிட்ட அசையாச்சொத்துக்களை "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" வாங்க, கீழ்க்கையொப்பமிட்ட நபரால், முடிவு உறுதியிட்ட விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன., அதன் விபரங்கள் இதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன.

கடன் குறியீட்டெண் / வினை / கடன்தாரர்(கள்) / கூட்டு-கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை (ரூபாயில்)	அசையாச் சொத்து விபரம் _ இறுதி	அடிப்படை விலை	டீபாவணித் தொகை (அடிப்படை விலையில் 10%)	நிறுவைத்தொகை (28.04.2023 ம் தேதியின் படி) (ரூபாயில்)
(கடன் குறியீட்டெண். 01100011001 / மதுரை வினை) தலைப்பகுதி K (கடன்தாரர்) கணவேஷ் K – (கூட்டு கடன்தாரர் 1)	20.07.2021 ரூ. 23,69,168/- ரூபாய். (இருபத்து மூன்று இலட்சத்து அறுபத்து ஒன்பதாயிரத்து நூற்று அறுபத்து எட்டு மட்டும்)	இந்தியா - 624 005 தமிழ்நாடு, திண்டுக்கல் தாலுக்கா, விளாம்பர் கோயில், செல்வி நகர், பழைய சர்வே எண். 543/7A1, புதிய சர்வே எண். 543/62A1 ல் அமையப்பெற்ற சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும்.	ரூ. 26,84,900/- (ரூபாய். இருபத்து ஆறு இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து தொள்ளாயிரம் மட்டும்)	ரூ. 2,68,490/- (ரூபாய். இரண்டு இலட்சத்து அறுபத்து எட்டாயிரத்து நாநூறு தொண்ணூறு மட்டும்)	ரூ. 41,49,747/- (ரூபாய். நாற்பத்து ஒரு இலட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரத்து எழுநூற்று நாற்பத்து ஏழு மட்டும்)

மின்னணு ஏல தேதி - 13.08.2026 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை (ஒவ்வொரு முறையும் எண்ணிடைவேளை 5 நிமிட நேர நீட்டிப்புடன்)

விலைப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி தேதி - 12.08.2026 மாலை 04.00 மணிக்கு முன்பு

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தயவு கூர்ந்து வலைதளம் www.piramalfinance.com/eAuction.html ல் கொடுக்கப்பட்டுள்ள தொடர்பை பார்வையிடவும் அல்லது எங்கு மின்னஞ்சல் முகவரி - piramal.auction@piramal.com மூலம் தொடர்பு கொள்ளவும்.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரருக்கு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் வழங்கப்படும் சட்டபூர்வமான 15 நாட்கள் கெடு அறிவிப்பு

பிரிவு 13(2) ன் கீழான அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தொகை முழுவதையும் ஏல தேதிக்கு முன்பு வரை சேர்த்து வரும் வட்டியுடன் சேர்த்து செலுத்த வேண்டுமென்பதை, தவறும் பட்சத்தில், சொத்து ஏலம் விடப்பட்டு / இவற்றை செய்யப்படுவதோடு, மீதி நிறுவை ஏதேனும் இருப்பின் அது வட்டி மற்றும் செலவுகளுடன் கடன்தாரர் / ஜாமீன்தாரரிடமிருந்து வசூலிக்கப்படும் என இதன் மூலம் இதன் மேற்குறிப்பிட்ட கடன்தாரர் / அடமானதாரர் / ஜாமீன்தாரருக்கு அறிவிக்கப்படுகிறது.

ஜாமீன் சொத்துக்களை மீட்க உள்ள கால அவகாசம் தொடர்பாக, மேற்சொன்ன சட்டம் பிரிவு 13 உட்பிரிவு 8 ன் கீழ், கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

ஏதேனும் காரணத்தால், மட்டுமல்லாது ஏலம் நடைபெறவில்லை எனில், ஜாமீன் பெற்று கடனளித்தவர் பிணைக்காப்பை தனியார் ஒப்பந்தம் மூலம் அமலாக்கம் செய்யலாம் என்பதை குறிப்பாக கடன்தாரர்களும் பொது மக்களும் தயவு கூர்ந்து அறியவும்.

இடம் : ROTN

தேதி : 28.07.2026

ஒப்பம்/- (அதிகாரப்பூர்வ அலுவலர்)
பிரமல் ஃபைனான்ஸ் லிமிட்டெட்

யூகோ வங்கி, நாவினிப்பட்டி கிளை, 5/5, திருச்சி மெயின் ரோடு, PRC டிப்போ மேலூர் அருகில் - 625106. Ph: 0452-2415574, 2415657, Mob: 9147403334, 9786081645 Email: navini@uco.bank.in

UCO BANK (भारत सरकार का उपक्रम) (A Govt. of India Undertaking) Honours Your Trust

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான அறிவிப்பு விதி 8(6)க்கான விதியைப் பார்க்கவும்

நிதி சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் மறுகட்டமைப்பின் கீழ், மற்றும் பாதுகாப்பு நலன்கள் அமலாக்க சட்டம் (2002) கீழ் பாதுகாப்பு நலன் (அமலாக்க) விதிகள் (2002)ன் கீழ் விதி (8/6)ல், அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன் வாங்கியவர்களுக்கும், மற்றும் கடன் உத்தரவாதம் அளித்தவர்களுக்கும் அறிவிக்கப்படுவது என்னவென்றால் பத்திரப்படுத்தப்பட்டுள்ள கடனாளரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களின் ஆக்கபூர்வமான உடமையை யூகோ வங்கியின் (பதிவிப்படுத்தப்பட்ட கடனாளர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் எடுக்கப்பட்டு நிறுவையில் உள்ள கடன் தொகையை, கடன் வாங்கியவர்களிடமும், மற்றும் கடன் உத்தரவாதம் அளித்தவர்களிடமும் இருந்து மீட்க கீழே குறிப்பிட்ட தேதி அன்று "As is where is", "As is what is", "Whatever there is" என்ற நிலையில் மின்-ஏல விற்பனை செய்யப்படும். இருப்பு விலை மற்றும் முன்வைப்பு தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

I. கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்களின் பெயர்/முகவரி: 1.திருமதி. தவப்பிரியா S, க.பெ. சதீஷ் (விண்ணப்பதாரர்), முகவரி: 5/146, செட்டியார் தெரு, கீழவளவு மேலூர், மதுரை-625102 மற்றும் 2) திரு. சதீஷ் K, (இணை விண்ணப்பதாரர்), முகவரி: எண்: 3-77B, செட்டியார் தெரு, கீழவளவு மதுரை-625102.

கோரிக்கை அறிவிப்பு தேதி: **22-01-2026** உடைமை தேதி: **30-04-2026** (குறிப்பிட்ட உடைமை)

மீட்டெடுக்கக் கூடிய தொகை: கால கடன் 23-07-2026 தேதியின் படி ரூ. **7.70** லட்சம், இதில் 29-06-2026 வரையிலான வட்டி, மற்றும் அதன் பிறகு சேரும் கூடுதல் வட்டி மற்றும் இதர தொடர்புடைய கட்டணங்கள்.

குறிப்பு: 2002 ஆம் ஆண்டு SARFAESI சட்டத்தின் பிரிவு 13(2)-ன் கீழ் 22-01-2026 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பின் படி 29-11-2025 அன்று வரையிலான வட்டியுடன் கால கடனுக்காக ரூ.7,95,006.39 (ரூபாய் ஏழு லட்சத்து தொண்ணூற்றைந்தாயிரத்து ஆறு மற்றும் முப்பத்தொன்பது பைசா மட்டும்)

சொத்தின் விளக்கம்: மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சி, மேலூர் துணைப் பதிவாளர் அலுவலகம், மேலூர் நகரம், மேலூர் தாலுகா, மதுரை மாவட்டம் ஆகியவற்றின் எல்லைகுள் உள்ள நிலம் மற்றும் அதன் மீதான கட்டிடம். நத்தம் நிலம் மறு சர்வே எண்: 133/13, T.S.எண். 518/14 படி 544 சதுர அடி பரப்பளவு கொண்டது. வடக்கில் சரியான அளவின்படி 17.அடி 6.அங்குலம், தெற்கில் சரியான அளவின்படி 15.அடி 0.அங்குலம், கிழக்கில் சரியான அளவின்படி 33.அடி 6.அங்குலம், மேற்கில் சரியான அளவின்படி 33.அடி 6.அங்குலம், எல்லைகள்: வடக்கில்: ஜெயராமனுக்குச் சொந்தமான சொத்து. தெற்கில்: சிமெண்ட் சாலை. கிழக்கில்: சிமெண்ட் சாலை. மேற்கில்: மாயக்கண்ணனுக்குச் சொந்தமான சொத்து. (அறிப்பட்ட விலைங்கங்களின் விவரங்கள் : ஏதுமில்லை.)

அடையாளம்: ஜசிஜசிஜ வங்கி, கீழவளவு. அருகிலுள்ள ரயில் நிலையம் / விமான நிலையம்: மதுரை ரயில் நிலையம் (48 கி.மீ)

சொத்து முகவரி (மின் குறியீட்டுடன்): S.No. 133/13, கீழவளவு, மதுரை-625102.

இருப்பு விலை: ரூ. 11.80 லட்சம். முன் வைப்புத்தொகை ரூ. 1.18 லட்சம்.

மின்-ஏல விற்பனை தேதி மற்றும் நேரம்: 29-08-2026 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை. (ஏலங்கள் ரூ.0.50 லட்சத்தின் மடங்குகளாக இருக்க வேண்டும் / தேவைப்பட்டால் 10 நிமிட வரம்பற்ற தானியங்கு கால நீட்டிப்புகளுடன்). ஏலங்கள் மற்றும் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி/நேரம்: 29-08-2026 அன்று மாலை 5.00 மணிவரை.

மேலும் விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் விவரங்களுக்கு வங்கி இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும். **(I) https://baanknet.com (II) https://www.uco.bank.in**

இடம்: நாவினிப்பட்டி,
தேதி : **24-07-2026**

- ஒப்பம் -தலைமை மேலாளர் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, யூகோ வங்கி

ஸ்டேட் பாங்க் ஆஃப் பரோடா Bank of Baroda இந்தியாவின் முன்னணி வங்கி 119 FOUNDATION YEAR LEADING WITH TRUST

பேங்க் ஆப் பரோடா

கிளை : ROSARB (பிராந்திய ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் வசூல் கிளை) : லோட்டஸ் சென்டர், 3வது தளம், எண்.4312/13D, VP ரத்தினசாமி ரோடு, மதுரை – 625 014, போன் : 0452 – 2601013, மின்னஞ்சல் : sarmdr@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ஒரக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)–ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ஈடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிறுவையை வசூலிக்க வேண்டி **"எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே"** மற்றும் **"பொறுப்பேற்காத நிலையில்"** எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிறுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / உத்தரவாதம்அளித்தவர்கள் /அடமானதாரர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் விரிவான விபரம் எல்லைக்கல்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் (உரிமையாளர் / அடமானதாரர் பெயர்)	மொத்த நிறுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	சுவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொன்றிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
1. திரு.A.மரியசூசை, (கடன்தாரர் மற்றும் அடமானதாரர்), (காலசென்றவர் – பிரதிநிதியாக அவருடைய சட்டபூர்வ வாரிசுதாரர்கள்), த/பெ.திரு.ஆரோக்கியம், எண்.9–3–45B, கிறிஸ்டியன் அரிசன வீதி, ஹனுமந்தம்பட்டி கிராமம், உத்தமபாளையம் தாலூகா, தேனி மாவட்டம் – 625 515, 2.திருமதி.ரெஜினாமேரி.M, (சார்– கடன்தாரர் மற்றும் சட்டபூர்வ வாரிசுதாரர்) க/பெ.திரு.A.மரியசூசை, எண்.9–3–45B, கிறிஸ்டியன் அரிசன வீதி, ஹனுமந்தம்பட்டி கிராமம், உத்தமபாளையம் தாலூகா, தேனி மாவட்டம் – 625 515 3.திரு.M.ஆரோக்கியராஜ், (உத்தரவாதமளித்தவர் மற்றும் சட்டபூர்வ வாரிசுதாரர்) த/பெ.திரு.A.மரியசூசை, எண்.9–3–45B, கிறிஸ்டியன் அரிசன வீதி, ஹனுமந்தம்பட்டி கிராமம், உத்தமபாளையம் தாலூகா, தேனி மாவட்டம் – 625 515 4.திருமதி.ஜெயந்தி (சட்டபூர்வ வாரிசுதாரர்), த/பெ.திரு.A.மரியசூசை, எண்.9–3–45B, கிறிஸ்டியன் அரிசன வீதி, ஹனுமந்தம்பட்டி கிராமம், உத்தமபாளையம் தாலூகா, தேனி மாவட்டம் – 625 515	பெரியகுளம் பதிவு மாவட்டம், உத்தமபாளையம் சார் மாவட்டம், ஹனுமந்தம்பட்டி கிராம கிறிஸ்டியன் அரிசன வீதி, கதவு எண்.9–2–45B (வரிவிதிப்பு எண்.1576), நத்தம் சர்வே எண்.1135/1 (பழைய எண்.416)ல் அடங்கியதும் அதன் பகுதியுமான நிலம் மற்றும் குடியிருப்புக் கட்டிடமும் சேர்ந்த சொத்தின் **எல்லைகள் வருமாறு :** கிழக்கு : மரியசூசை வீடு, மேற்கு : வீதி, தெற்கு : ராயப்பன் வீடு, வடக்கு : வீதி. இவ்வெல்லைகளுக்குள், கிழமேல் 16 அடி, தென்வடல் 16 அடி ஆக உள்ள 256 சதுர அடி வீட்டுடன் கூடிய சொத்து, தமிழ்நாடு மின்சார இணைப்பு எண்.722 மற்றும் மாமூல் தடவழி உரிமைகள் சேர்ந்த சொத்து. இச்சொத்தின் மேல்விவரங்கள் உத்தமபாளையம் தனி வட்டாட்சியர் வழங்கிய நத்தம் பட்டா ஆவண எண்.1082 நாள் 09.01.1997, உத்தமபாளையம் துணை வட்டாட்சியர் நத்தம் பட்டா எண்.1081 நாள் 29.11.2010 மற்றும் வங்கியின் MODTD ஆவண எண். 578/2011 நாள் 03.03.2011 ஆகியவற்றில் உள்ளன. சொத்து திரு.ஆரோக்கியம் மகன் திரு.A.மரியசூசை (கடன்தாரர் மற்றும் அடமானதாரர்)க்குச் சொந்தமானதாகும். **வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம் (ஏதேனுமிருப்பின்) : NIL** **அட்சரேகை : N 9.784985 மற்றும் தீர்க்கரேகை : E 77.318965** BAANKNET Property ID: BARB602820260003	மொத்த நிறுவைத் தொகை 27.07.2026 தேதியின்று, ரூ.4,25,730/– (ரூபாய் நான்கு லட்சத்து இருபத்து ஐந்தாயிரத்து எழுநூற்று முப்பது மட்டும்) 27.07.2026 தேதியின்று, மற்றும் பின்வட்டி, செலவுகள், பிற கட்டணங்களுடன்.	08.09.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.3,50,000/– (ரூபாய் மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) 2. ரூ.. 35,000/– (ரூபாய் முப்பத்து ஐந்தாயிரம் மட்டும்) 3. ரூ.25,000/– (ரூபாய் இருபத்து ஐந்தாயிரம் மட்டும்)	ஆக்கப்பூர்வ (Constructive) சுவாதீனம்	05.09.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
1. திரு.S.ஹாரீஸ் அப்துல் காதர் (கடன்தாரர்), த/பெ.திரு.S.ஷாஜஹான், கதவு எண்.25/68, அன்சாரி நகர், 1வது வீதி, மெஹபூப்பாளையம், மதுரை – 625 010. 2. திரு.S.ஷாஜஹான் (சார்–கடன்தாரர் மற்றும் அடமானதாரர்), த/பெ.திரு.ஷேக் அப்துல் காதர், கதவு எண்.25/68, அன்சாரி நகர், 1வது வீதி, மெஹபூப்பாளையம், மதுரை – 625 010.	தேனி மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், தேனி சார் பதிவு மாவட்டம், தேனி தாலூகா, அல்லிநகரம் கிராமம், அல்லிநகரம் நகராட்சி, தேனி டவுன், சஹஜாப் ராவுத்தர் வீதி, அயன் சர்வே எண்.482/B6B, இதிலடங்கியதும் அதன் பகுதியுமான குடியிருப்பு நிலம் மற்றும் கட்டிடச் சொத்தின், மொத்தமுள்ள 26 சென்டில் வட மேற்குப் பகுதியிலுள்ள மொத்தம் 1047.25 சதுரடியில் தென்புற மற்றும் மேற்புற பகுதி 662.25 சதுரடி காலி வீட்டு மனை, மற்றும் வீடு– பழைய வார்டு எண்.19, உள்ள வார்டு எண்.29, கதவு எண்.11 கொண்ட வீட்டின் வரி விதிப்பு எண்.19309. **எல்லைகள் விபரம் :** மேற்கு – திரு.ஹபிபுல்லா மற்றும் திரு.S.ஷாஜஹானின் வீடு மற்றும் பொதுச் சந்து, தெற்கு – தென்வடல் 3 அடி அகல கிழமேல் பொதுச் சந்து, கிழக்கு – ஹாஜி S.முகமது கனி மற்றும் S. ஹக்கீம் ஆகியோரின் வீடுகள் மற